# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 13 /2017

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : Malayarasan | Father/Husband Name | : Periyampillai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 04.08.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**( Accused present.)**

**சாட்சி ஆஜர், இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு முதல் விசாரணை பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் அழகாத்தாள்பட்டியில் குடியிருந்துகொண்டு ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 7, 8 வருடங்களுக்கு முன்பு வெள்ளரிப்பட்டியிலுள்ள டி.வி.எஸ். கம்பெணியிலிருந்து 407 வேனில் சரக்கு ஏற்றிக்கொண்டு அந்த வண்டியை நான் ஓட்ட என்னுடன் ஆஜர் எதிரி ரவி என்னுடன் வந்தார். அந்த வண்டியை நான் அரிட்டாபட்டியிலுள்ள ரப்பர் கம்பெணிக்கு அந்த சரக்கை இறக்கினேன். என்னுடன் ஆஜர் எதிரி ரவி அவரது 407 வண்டியில் மேற்படி ரப்பர் கம்பெணிக்கு அதை எடுத்து வருவதற்காக என்னுடன் வந்தார். ஆஜர் எதிரி அவரது 407-ஐ அரிட்டாபட்டியிலுள்ள ரப்பர் கம்பெணியிலிருந்து எடுத்துக்கொண்டு என் முன்பாக சென்றார். நான் அதன்பின்பு சரக்கை இறக்கிவிட்டு எனத வண்டியை எடுத்துக்கொண்டு ரப்பர் கம்பெணியைவிட்டு வெளியே சென்றபோது அரிட்டாபட்டி ரோட்டிலுள்ள ஆண்டிகோவில் அருகில் நான் சென்று பார்த்தபோது அந்த ரோட்டில் அரிசி சிதறிக்கிடந்தது. நான் எனது வண்டியின் லைட்டை அடித்து பார்த்தபோது வலதுபக்கம் இருசக்கர வாகனம் ஒரு இருசக்கர வாகனம் கீழே கிடந்தது.

நான் அந்த இடத்தை விட்டு 100 மீட்டர் தான்டியவுடன் அரிட்டாபட்டி ஊர்க்காரர்கள் வந்துவிட்டார்கள். நான் அவர்களை வழிமறித்து ஆண்டிக்கோவில் அருகில் ஒரு இருசக்கரவ ாகனம் கிடப்பதாக சொலலிவிட்டு நான் சென்றுவிட்டேன். நரசிங்கம்பட்டி விலக்கில்

இருந்தவர்களிடமும் நடந்த சம்பவத்தை சொன்னேன். மறுநாள் காலையில் அரிட்டபாட்டியை சேர்ந்த ஊர் மக்கள் நான் வேலை பார்க்கும் டிவிஎஸ் கம்பெணிக்கு வந்து அன்றையதினம் கோயில் அருகில் கிடந்த இருச்கரவாகனமானது விபத்து ஏற்பட்டு இருந்ததாகவும், அந்த விபத்தானது எனது வண்டியில்தான் நடந்தது என்று என்னிடம் கேட்டார்கள். நான் அவர்களிடம் நான் விபத்தை ஏற்படுத்தவில்லை. இருசக்கர வாகனம் கிடந்ததாக சொல்லிவிட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னேன். அதை கேட்டுவிட்டு ஊர்மக்கள் சென்றுவிட்டனர். அதன்பின்பு அந்த இருசக்கர வாகனத்தில் விபத்திற்குள்ளான நபர் விஜய்முருகன் என்று கேள்விப்பட்டேன். என்னையும், ஆஜர் எதிரியையும் போலீசார் அழைத்து வந்து விசாரித்தனர். அதன்பின்பு ஆஜர் எதிரி விபத்தை ஏற்படுத்தியதாக போலீசாரிடம் ஒத்துக்கொண்டதாக என்னிடம் காவல் நிலையத்தலிருந்த போலீசார் சொன்னார்கள். அந்த விசயத்தை தெரிந்துகொண்டேன். அதன்பின்பு போலீசார் என்னை வீட்டிற்கு போகச்சொன்னதும் நான் சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

இவ்வழக்கில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது சம்மந்தமாக உங்களால் நேரடியாக வாகன விபத்து பார்க்கப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கில் கண்டுள்ள வாகன விபத்து சம்மந்தமாக ஊரில் சட்டப்பிரச்சனை ஏற்பட்டு நீங்கள் பணிபுரிந்த டி.வி.எஸ். கம்பெணியில் தகராறு நடந்து அதனால் அணைவரையும் காவல் நிலையததிற்கு அழைத்து வந்து விசாரித்தனர் என்றால் சரிதான். அவ்வாறு காவல்துறையினர் விசாரணையில் ஒவ்வொரு தரப்பினரையும் வாகன விபத்து சம்மந்தமாக நீங்கள்தான் ஏற்படுத்தினீர்களா என்றால் விசாரணை செய்தர்களா என்றால் ஆமாம். எதிரி வாகன விபத்து ஏற்படுத்தியது சம்மந்தமாக உங்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டாரா என்றால் போலீசார் ஒவ்வொருவரையும் தனி தனியாக விசாரணை செய்தார்கள். அதனால் எதிரி வாகன விபத்து ஏற்படுத்தியது சம்மந்தமாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பது குறித்து எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் உங்களிடம் எழுத்துப்பூர்வமாக எழுதி கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை.

கடந்த 11.07.15-ம் தேதி 19 மணியளவில் நரசிங்கம்பட்டி அரிட்டாபட்டி சாலை பெருமாள்மலை ஆண்டிக்கோயில் அருகில் விஜய்முருகன் என்பவர் எதிரி ஓட்டிவந்த வாகன விபத்தால் இறக்கவிலலை என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் தானாக சென்று விழுந்ததில் வாகன விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாகன விபத்து ஏற்பட்டது எவ்வாறு

என்பது சந்தேகமாக இருந்த நிலையில் ஊர்மக்களால் போராட்டம் செய்ததினால் ஆஜர் எதிரிமீது இந்த வழக்கு பொய்யாக தாக்கல செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தாரும், நீங்கள் பணிபுரியக்கூடிய நிறுவனத்தின் சார்பிலும் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 13 /2017

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : Malini | Father/Husband Name | : Vijaimurugan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 04.08.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**( Accused present.)**

**சாட்சி ஆஜர், இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு முதல் விசாரணை பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தெற்குத்தெருவில் குடியிருந்துகொண்டு முதுநிலை பட்டையபடிப்பு படித்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்துபோன விஜய்முருகன் என் கணவர். கடந்த 11.07.15ம் தேதி நானும், எனது கணவாய் விஜய்முருகனும் வெள்ளரிப்பட்டியில் உள்ள எனது கணவரின அக்கா வீட்டிற்கு அரிட்டாபட்டியிலிருந்து வெள்ளரிப்பட்டிக்கு இருசக்கர வாகனத்தை எனது கணவர் ஓட்ட, நான் பின்னால் உட்கார்ந்து வெள்ளரிப்பட்டிக்கு வந்துவிட்டோம். அதன்பின்பு அன்றையதினம் மாலை 6 மணியளவில் எனது கணவர் மட்டும் அந்த இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊரான அரிட்டாபட்டிக்கு வந்துகொண்டிருந்தபோது அரிட்டாபட்டி ரோட்டில் உள்ள தொழிற்சாலைக்கு அருகில் எனது கணவர் வந்தபோது விபத்து ஏற்பட்டதாக என் மாமனார் சின்ன அடைக்கனுக்கு தகவல் வந்தது. அப்போது நாங்கள் எல்லோரும் அரிட்டாபட்டியில் உள்ள எங்கள் வீட்டிலிருந்தோம். உடனே நாங்கள் எல்லோரும் புறப்பட்டு மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது எனது கணவர் இறந்துவிட்டார். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. வாகன விபத்து ஏற்படுத்திய வண்டிகுறித்து எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை: (எதிரிதரப்பில்)**

கடந்த 11.07.15-ம் தேதி 19 மணியளவில் நரசிங்கம்பட்டி அரிட்டாபட்டி சாலை, பெருமாள்மலை ஆண்டிக்கோயில் அருகில் விஜய்முருகன் என்பவர் எதிரி ஓட்டிவந்த வாகன விபத்தால் இறக்கவிலலை என்று சொன்னால்

சரியல்ல. இறந்த நபர் தானாக சென்று விழுந்ததில் வாகன விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாகன விபத்து ஏற்பட்டது எவ்வாறு என்பது சந்தேகமாக இருந்த நிலையில் ஊர்மக்களால் போராட்டம் செய்ததினால் ஆஜர் எதிரிமீது இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியை உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபர் என் கணவர் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் யசாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**